உள்ளூர் கடன் பத்திரங்களுக்குக் குறைந்த வட்டி அளவில், அதாவது, தற்போதுகூட 8.92 சதவீதம் வட்டிக்கு மாநில அரசால் கடன் திரட்ட இயலுகிறது. இது பிற மாநிலங்கள் வெளியிடும் கடன் பத்திரத்தின் மீதான வட்டியினைவிடக் குறைவுதான் என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாநில அரசு வெளியிடும் கடன் பத்திரங்களுக்கு, மத்திய அரசின் ஒப்புதல் அவசியம் ஆகும். வெளிச் சந்தையில், அதிக அளவு பணம் இருக்கும்போது, வட்டி வீதம் குறைவாகவே இருக்கும். அந்த சமயத்தில், உடனே கடன் திரட்டுவதற்கான பத்திரங்களை நாம் நினைத்தவுடன் வெளியிட்டுவிட முடியாது. தனது நிதிப் பற்றாக்குறைக்கு வெளிச் சந்தையில் திரட்டப்பட வேண்டிய தொகையினைக் கருத்தில்கொண்டுதான் மத்திய அரசு நமக்கு ஒப்புதலை வழங்குகிறது.

எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறந்த நிதி மேலாண்மைக் கொள்கைகளை எவ்வாறு கடைப்பிடிக்கிறது என்பதும்; வேகமான வளர்ச்சிப் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதும் எனது இந்த விளக்கங்களால் தெரியவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. நீலகிரி மாவட்டம்—பந்தலூர் கிராமத்தில் சத்தியவதி என்ற பெண் மானபங்கப்படுத்தப்பட்டதாக வந்த புகார் குறித்த முதலமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், தேவாலா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பந்தலூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த 17 வயது பெண் ஒருவர் 14–3–2012 அன்று வீட்டில் தனியாக இருக்கும்போது, ஆட்டோ ஓட்டுனர் ஸ்ரீகாந்த் என்கிற குட்டி என்பவர் வீட்டிற்குள் நுழைந்து, அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து மானபங்கப்படுத்தியதாக அந்தப் பெண் அன்று மாலை தன் தந்தை சக்திவேல் என்பவரிடம் தெரிவித்ததையடுத்து, சக்திவேல், வசந்தன்

என்பவருடன் மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரிக்கச் சென்றபோது, தகராறு ஏற்பட்டு ஸ்ரீகாந்தின் உறவினரான பிரபு என்பவர் தாக்கப்பட்டு கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் சத்தியவதி மானபங்கப்படுத்தப்பட்டதாக தேவாலா காவல் நிலைய குற்ற எண் 193/2012 இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 448, 354 மற்றும் பெண்களுக்கெதிரான வன்கொடுமை சட்டப் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு ஸ்ரீகாந்த் என்கிற குட்டி கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார். பிரபு என்பவர் தாக்கப்பட்டது குறித்து தேவாலா காவல் நிலைய குற்ற எண் 194/2012 இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளின் 307, 427–படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான சக்திவேல், வசந்தன் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பெண் மானபங்கப்படுத்தப்பட்டார் என்று அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் தகுந்த பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டண சலுகை—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏழை எளிய, நலிந்த, அடித்தள மக்களின் நலன்களைப் பாதுகாப்பதிலே எப்போதுமே அக்கறை உள்ள அரசு என்கிற அந்த உணர்விற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மகுடம் சேர்த்தாற்போல், அந்த எண்ணங்களுக்குச் சிகரமாய் இன்றைக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்திருக்கின்ற மின் கட்டண உயர்வை, ஏறக்குறைய ரூ.740 கோடி அதற்கு மானியம் தந்து குறைத்திருக்கிற, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தாயுள்ளத்தை தமிழக மக்களின் சார்பிலே பாராட்டக்